இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018
UGC Approved Journal (64089), © Author

# இரட்டைக் காப்பியங்களில் மனிதநேயச் சிந்தனைகள்

**மா.விஜயலெட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

*தமிழ் இலக்கியத்தில் உரையிடையிட்ட பாட்டுடையச் செய்யுள் என்று அழைக்கப்படுவது சிலப்பதிகாரம் ஆகும். இரட்டைக் காப்பியங்கள் என்று அனைவராலும் ஏற்றக்கொள்ளப்பட்ட சிலப்பதிகாரமும், மணிமேகலையும் வாழ்வின் குறிக்கோள்களையும் அன்பின் வெளிப்பாடுகளையும் சமுதாயச் சீர்த்திருத்தங்களின் களஞ்சியத்தையும் மனிதநேய பண்பின் அர்த்தங்களையும் ஒழுகலாறுகளை எடுத்துரைக்கும் விதமாக சிறப்புகளை பற்றியும் பசி ஒழிப்பு, சிறை ஒழிப்பு, பரத்தமை ஒழிப்பு, பௌத்தக் காப்பியத்தின் வெளிப்பாடுகளும் பல்லாண்டு வாழச்செய்த இல்லோர் செம்மல் கோவலனின் அன்பும் ஆயர்குலப் பெண்களின் செயல்பாடுகள் பசிப்பிணியைப் போக்கியவள் விருந்தோம்பல் பண்பினையும், அறத்தை வலியுறுத்தும் நோக்கமாகவும் கண்ணகி தெய்வத்தை வணங்குதல் தொடர்பாகவும் அவற்றின் வழியாக இக்கட்டுரை ஆராயும் நோக்கமாக அமைகிறது.*

### சிலப்பதிகாரத்தில் மனிதநேயம்

தமிழ் இலக்கியத்தில் நெடுங்கதை என்று அழைக்கப்படும் காப்பியங்களில் மனிதநேயத்தின் மூலங்கள் ஆழ்ந்து ஊன்றப்பட்டுள்ளன. போர்க்களத்தில் ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொன்று குவிக்கக் கூடிய ஆற்ற பெற்ற காப்பியத் தலைவர்கள் பிற வேலைகளில் மிகுந்த எளிமையுடையோராய் சிற்றுயிர்களுக்கும் இறங்கும் பேரருள் பெற்றுச் சிறக்கின்றனர்.

ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையான சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் வழியில் உள்ள ஒரு பூம்பொழிலில் தங்கவே அப்பொழிலுக்கு வந்த பரத்தையும் வறுமொழியாளனும் கண்ணகியையும் கோவலனையும் கண்டு கவுந்தியடிகளிடம் வினவினர். கவுந்தியடிகள் இவர்கள் என்மக்கள் என்றார். அது கேட்ட அவர்கள்

**“உடன் வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை கடவதும் உண்டோ கற்றறீந் தீரென”** **(சிலம்பு.ப:152-153)**

என வினவினர். அது கேட்டுப் பெறாத கவுந்தியடிகள் அவர்களை முன்னிடைக் காட்டிய முது நரியாகுக என்று சபித்தார். இந்நிகழ்வைக் கண்ட கோவலனின் மனிதநேயம் உறுத்தவே, கவுந்தியடிகளிடம் அவர்களுக்காக இரங்குகிறான். கோவலனின் மனித நேயத்திற்காகவே கவுந்தியடிகள் சாபம் ஓராண்டில் நீங்குமாறு அருள் செய்தார்.

**“நெறியின் நீங்கியோர் நீரல் கூறினும்
அறியாமை யென் றறியல் வேண்டும்
செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்
குய்திக் காலம் உறையீரோவென”**
**(மேலது.ப:237–240)**

என்ற அடிகள் இப்பண்மை நன்கு வெளிப்படுத்துகின்றன. தம்மைத் தூற்றினோரை ஒறுக்காது பொறுத்தலும் ஒருவகை அன்பாகும்.

கவுந்தியடிகளுடன் மதுரைக்குப் புறப்பட்ட கோவலன், கண்ணகி ஆகியோர் காவிரித்தென்கரை வழியாக வந்த ஒரு பூம்பொழிலில் தங்கினர். கோவலனும் கண்ணகியும் தனியே உரையாடிக்

கொண்டிருந்தனர். அப்போது வம்பப் பரத்தையும் வறுமொழியாளனாகிய இருவர் இவர்களைக் காட்டி யாரென அடிகளிடம் கேட்க, அதற்கு அவர் எம்மக்கள் என அன்பினால் கூறினார். அது கேட்ட அவர்கள் உடன் பிறந்தவர்கள் இணையராய் வாழ்தல் உண்டா என்று கேலியாகக் கேட்டனர். அதைக் கண்ட கவுந்தியடிகள் தான் ஒரு துறவி என்பதையும் துறவிகளுக்கு கோபம் கூடாது என்பதையும் மறந்து அவர்களை நரிகளாக மாறச் சபித்தார். அவ்வாறே நிகழக்கண்ட கண்ணகியும் கோவலனும் அவர்கள் பால் இரக்கம் கொண்டு அறியாமையினால் செய்த பிழை எனக் கொண்டு சாபத்தினை நீக்க வேண்டும் என்று அடிகளிடம் வேண்டிக் கொண்டனர். தன்னைக் கேலி செய்தவர்களையே காக்க நினைத்த மனிதநேயத்தின் வெளிப்பாடாகத்தான் கண்ணகியின் கூற்று அமைந்துள்ளது.

**கவுந்தியடிகளின் இரவுப்பயணம்**

கோவலன் கண்ணகி இருவரும் மதுரை செல்வதற்குப் புறப்பட்டுப் புகாரை விட்டு வெளியேறி பத்துகல் நடந்த கவுந்தியடிகள் தங்கியிருந்த பள்ளிக்கு இரவில் வந்தனர். அப்போது கவுந்தியடினள் பாடக மணிந்த கண்ணகியின் சீறடி பருக்கைக் கற்களில் பகையை வென்று நடக்கமாட்டா, காடுகிடையிட்ட நாடு கடந்து செல்லுதல் அரிது. இவளுடன் நடந்து காடு கடந்து செல்லும் நினைவை மாற்றிக் கொள்ளுங்கள் என மனிதநேய உணர்வோடு அறிவுரை கூறுவதை,

**“பாடகச் சீறடி பரற்பகை உழவா**
**காடு இடையிட்ட நாடு நீர் கழிதற்கு**
**அரிது இவள் செல்லி அறிகுநர் யாவோ?**
**உரியது அன்று எங்கு ஒழிக”**

என்று கூறுகிறார். கண்ணகியின் துயரம் கண்டு இரங்கித் தன் சமயக் கொள்கையைக் கூடத் தளர்த்திக் கொள்ளும் மனநிலையினை கவுந்தியடிகள் அடைந்தார் எனில், அவளின் மனித நேயத்தை,

**பகலொலி தன்னினும் பல்லுயிர் ஓம்பும்**
**நிலவொளி விளக்கின் நீள் இடை மருங்கின்**
**இரவிடைக் கழுதற்கு ஏதும் இல் எனக்**
**குரவரும் நேர்ந்த கொள்கையின் அமர்ந்து**

என இளங்கோவடிகள் இதனைச் சுட்டுவார்.

**கோவலனின் மனித நேயம்**

மதுரைக்காண்டம் அடைக்கலக் காதையில் குமரியாடி மீண்டு வரும் மாடலனின் வழி கோவலனின் மனித நேயம் வெளிப்படுகிறது.

மணிமேகலையின் பெயர் சூட்டுவிழாவின் போது தானம் பெறுவதற்கு வந்து முதுமறையோனை மதயானை யினின்றும் விடுவித்தான். இதிலிருந்து கடக்களிறு அடக்கிய கருணை மறவன்! என்னும் பெயர் பெற்றான். கருணை என்பதே மனிதநேயம் தான். முதுமறையோனிடம் எதுவும் எதிர்ப்பாராமல் தானே முன்வந்து அவரது உயிரைக் காப்பாற்றியது மனித நேயப் பண்பாடும். இதனை,

**“கடக்களிடறக்கிய கருணை மறவ”**
**(சிலம்பு.மதுரை.வரி:15:53)**

என்னும் அடி எடுத்துரைக்கும்.

கணவனால் துறக்கப்பட்ட பார்ப்பனியின் வாழ்க்கையினைச் செம்மையுறச் செய்தான். இதனால் செல்லாச்செல்வன் என்று அழைக்கப்பட்டவன். இவ்வாறு துயருற்ற அபலைப் பெண்ணின் வாழ்க்கைச் சீர்பெறச் செய்த தன்மையும் மனிதநேயமாகும். இதனை,

**“அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன”**
**(மேலது.15:68)**

**“நல்வழிப்படுத்து செல்லாச் செல்வ”**
**(மேலது.15:75)**

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

நன்னெடும் பூதம் ஒன்று பொய்சாட்சி கூறிய ஒருவனைப் புடைத்துண்ண தனயனை இழந்து தவிக்கும் தாய் ஒருத்திக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்துச் சுற்றத்தாரைப் போலக் கருதிப் பசி நோய் தணித்துப் பல்லாண்டுகள் வாழச் செய்த இல்லோர்ச் செம்மல் கோவலன். இதுவும் பிறர் கண்டு பெறாது துன்பம் தீர்த்த மனிதநேயமாகும். இதனை,

**“பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு**

**…………………………………………**

**பற்றிய கிளைஞரின் பசிப்பிணியறுத்துப்**
**பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்”**
**(மேலது15:80-90)**

என்னும் வரிகளால் தெளியலாம்.

**மாதரியின் மனிதநேயம்**

மாதிரி என்னும் ஆயர்குலப் பெண் தன்மையுடையவள் என் சித்தரிக்கப்படுகிறாள். அந்த அருள் பண்பே கண்ணகியை நன்கு காப்பாற்றச்செய்தது. தாயும் ஆகித்தாங்கியவள் மாதரி. கண்ணகியை அறியாத மாதரி கவுந்தியடிகள் கூறியவற்றைக் கேட்டு உதவி செய்தாள்.

அத்தோடு மட்டுமின்றி தன் மகளான ஐயையைக் குற்றேவல் செய்யும் பொருட்டும் அவர்களுக்குத் துணையாக அமர்த்தியதும் மனிதநேயமாகும். அவர்களுக்குரிய துன்பங்களுக்கு ஆறுதல் கூறி நீக்கினாள். அவர் உணவு சமைப்பதற்கு உரிய அனைத்தையும் கொடுத்தாள். தங்க இடமும் அளித்தாள். அவர்கள் உணவு உண்ணும்

அழகைக் கண்டு கண்ணனும் நப்பின்னையும் போலும் என இருவரும் மகிழ்ந்தனர். இவ்வாறான மாதரியின் மனிதநேயப் பண்பை,

**"மாதவத்தாட்டி வழியத்துயர் நீக்கி**
**ஏதமில்லா இடந்தலைப் படுத்தினள்**
**நோதக வேண்டாம்**
**ஐயை காணீரடித் தொழிலாட்டி"**
**(சிலம்பு.16:10-18)**

என்னும் வரிகள் நினைவுப்படுத்துகின்றன.

**கண்ணகியின் மனிதநேயம்**

தன் கணவனை இழந்த கண்ணகி நீதி தவறிய நெடுஞ்செழியனின் நாட்டை அழிக்கும் பான்மையில் மதுரையைத் தீக்கரையாக்குகின்றாள். ஆண்டும் நல்லோரைக் காத்துத் தீயோரை மட்டுமே அத்தீயும் சுட்டரிக்க வேண்டும் என்பதை,

**"பார்ப்பா றறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்**
**மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு**
**தீத்ததிறத்தார் பக்கமே சேர்க"**
**(சிலம்பு.21:53-55)**

என்ற கண்ணகியின் சூளுரையில் விஞ்சி நிற்பது மனிதநேயமே.

**இளங்கோ வேண்மாளின் மனிதநேயம்**

மலைவாணர்கள் கண்ணகி விமானமேறிச் சென்ற செய்திகயைக் கூறியதும் இதற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம். சாத்தனார் செங்குட்டுவனிடம் கூறினார். வஞ்சிக்காண்டம் காட்சிக்காதையில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. இதனை உடன் இருந்து கேட்ட அரசியாகிய இளங்கோ வேண்மாளிடம் செங்குட்வன் சிறப்பினையுடையோர் யார் எனக்கேட்டான். அதற்கு கற்புக் கடவுளாகிய கண்ணகியைப் போற்றுதல் வேண்டும் என்றாள். இதனை,

**"……………….நம் அகல்நாடு அடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென" (சிலம்பு. 25: 113-114)**

என்னும் வரிகள் விளக்கும். பிறர் வாயிலாகக் கூறக்கேட்ட செய்தி இது. எனினும் ஒரு பெண் சொல்லொண்ணாத் துயரம் அடைந்ததைக் கேட்டு அப்பெண்ணை உயர்த்துதல் வேண்டும், அவளுக்குப் புகழ் சேர்க்க வேண்டும், கோயில் எடுக்க வேண்டும் தெய்வ அளவுக்கு உயர்த்த வேண்டும் என விடையளிப்பவள் இளங்கோ வேண்மாள். இப்பண்பே மிக உயர்ந்த மனிதநேயமாகும்.

**மணிமேகலையில் மனித நேயம்**

மணிமேகலையை இயற்றிய சாத்தனார் மணிமேகலைக்கு இட்ட பெயர் "மணிமேகலை துறவு" என்பதாகும். ஆனால், இது காலப்போக்கில் மணிமேகலை என்று வழங்கி வருகிறது. காப்பியத்தலைவியின் பெயரால் அமைக்கப்பட்டது இக்காப்பியம். இலக்கியச் சுவையை விட பௌத்த சமய விளக்கமே காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. பௌத்த சமயத்தின் உயரிய கோட்பாடுகளை விளக்கும் ஒப்புயர்வற்றக் காப்பியம் மணிமேகலை. முப்பது காதைகளையுடைய இந்நூலில் இறுதி நான்கு காதைகள் பௌத்த சமயக் கருத்துக்களை எடுத்துரைப்பன ஆகும். பௌத்த சமயக் கொள்கைகளைக் கூறுவதொடு நின்றுவிடாமல் பசி ஒழிப்பு, சிறை ஒழிப்பு, பரத்தமை ஒழிப்பு போன்ற பல சமுதாயச் சீரத்திருத்தங்களின் களஞ்சியமாக விளங்குகின்றது. மனித குலம் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்னும் குறிக்கோளையும் ஒழுகலாறுகளையும் எடுத்துரைக்கும் சிறப்புடையது. அன்பைப் போதிப்பதும் அறத்தைத் வலியுறுத்துவதும் இந்நூலின் நோக்கமாக அமைந்துள்ளதை,

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர்**
**அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு (குறள்:72)**

என்ற குறளில் வள்ளுவர் அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமை வைத்துக் கொள்வார். ஆனால், அன்பு உடையவர் தம் உடமையையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்பவர் என்று கூறுகிறது. இதுபோல் மணிமேகலையில் தான் மட்டும் உண்ணாமல் தன்னால் இயன்ற அளவு பசிப்பிணியைப் போக்கியவள் மணிமேகலை.

**முடிவுரை**

தமிழரின் அடையாளமாகவும் குடிமக்கள் காப்பியம் என்று அழைக்கப்படுவது சிலப்பதிகாரம். இரட்டைக்காப்பியங்கள் என்று வர்ணிக்கப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து இன்றளவும் அனைவராலும் புகழ்ந்து போற்றப்படுகிறது. அன்பின் வெளிப்பாடுகள் இரங்கத்தன்மை கோபத்தின் உச்சக்கட்ட நிலை எம்மக்கள் என்ற விசுவாசநிலை தானம் கருணை வாழ்க்கையின் அமைப்புகள் மாந்தர்களின் செயல்பாடுகள் பற்றியும் கண்ணகியின் நீதியின் வெளிப்பாடுகள் பற்றியும் முழுமையாகவும் தெளிவாகவும் ஆழ்ந்த நுட்பத்தினையும் நமக்கு எடுத்துக்கூறும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.